# மறை அரும்பு

திருப்பாலர் சபை வெளியீடு

HC

## சிறுவர்கள் எமக்கு இயேசுவே ஒளியாவதால்



## உலகிற்கு நாம் ஒளியாவோம்

5/=


மலர் 21 இதழ் 3 புரட்டாதி - மார்கழி 2014

## சமாதானம் மலரும் நத்தார் மற்றும்
## இறையாசீர் நிறை புதுவருட வாழ்த்துக்கள்




தேசிய இய்க்குனர்,
தேசிய செயலகத்தில் பணிபுரியும்
அருட்சகோதரிகள், அண்ணா
மற்றும் அக்காமார்.

# யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயரின் செய்தி



பரலோக தந்தையுடன் செல்லும் வழியை எமக்கு சொல்லித்தர, காட்டித்தர குருக்கள், துறவிகள் எமக்கு தேவை. குருக்கள் இல்லையென்றால் ஞாயிறு திருப்பலிக்கு எங்கே நாம் போவோம்? குருக்கள் இல்லையென்றால் சிறுவர்களாகிய எமக்கு யார் இயேசுவை பற்றி சொல்லித் தருவது? உங்கள் சகோதர, சகோதரிகள் குருக்கள் துறவிகள் ஆவதற்காக தங்களது விருப்பத்தை தெரிவிப்பதை நீங்கள் விரும்புவீர்கள்.

அழைத்தல் என்பது இறைவனின் ஒரு விசேட அழைப்பு. இதனை ஒரு தனிப்பட்டவரின் செபத்தின் மூலமோ அல்லது தியானத்தின் மூலமோ இவ் அழைப்பை அறிந்து கொள்ளலாம். எனவே, குழந்தை செல்வங்களே இறை அழைத்தல் பெற மன்றாடுங்கள். உங்களிடத்தில் இறைவனின் அழைப்பு குரல் கேட்டால் உங்கள் பெற்றோரிடம் இதைப்பற்றி கூறவேண்டும். அவர்களின் உறுதுணையுடன் குருக்கள், துறவிகளின் அறிவுரைகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

புனித சின்னத்திரேசா அழைத்தலுக்காக தொடர்ந்து மன்றாடினார். அவருடைய செபத்தை இறைவன் ஆசீர்வதித்து கேட்டுக் கொண்டார். சிறுவர்களாகிய நீங்களும் உங்கள் அழைத்தலுக்காக இயேசுவிடம் மன்றாடுங்கள். விசேடவிதமாக உங்கள் ஒவ்வொருவரையும் இயேசு அழைக்கின்றார். அவருக்கு உங்களின் பதில் என்ன?.....

**அதிமேதகு ஆயர். தோமஸ் சௌந்திரநாயகம்**
**யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்.**

**"சிறுவர்களாகிய நீங்களும் புனிதராவதற்கு அழைக்கப்பட்டுள்ளீர்கள்".**

அன்புள்ள மகனே, மகளே!

குழந்தை இயேசு பிறந்த இம்மார்கழி மாதத்தில், மறையரும்பு சஞ்சிகையின் மூலம் சிறிய மழலைச் செல்வங்களுக்கு எனது கருத்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

புனிதர்களின் வரிசையில் உங்களைப் போன்ற சிறிய மழலைகள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள் தானே?, லூர்துவில் புனித பெர்னடெத், புனித மரிய கொரட்டி, புனித திரேசா, புனித தார்சியஸ் போன்ற சிறிய புனிதர்களைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள், கேள்விப்பட்டிருப்பீர்கள் தானே? அவர்களைப் போல் நானும், ஒரு புனிதராக, புனிதையாக வர முடியுமென்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். ஆனால், அவர்கள் புனிதர்களாவதற்கு பெரிய காரியமெதுவும் செய்யவில்லை என்பதை அவர்களின் வாழ்க்கை கதையைப் பார்க்கும் போது தெரிந்திருக்கும்.

எங்களை புனித வாழ்வுக்கு அழைத்திருப்பதை ஞாபகப்படுத்தி கார்த்திகை மாதம் முடிவடைவதுடன், மார்கழி குளிரானது இயேசு பாலனின் பிறப்பின் திருவிழாவையும்



**அருட்பணி. ஹர்ஷ நிலங்க டயஸ்**
**கண்டி மறைமாவட்ட இயக்குனர்.**

அண்மித்திருப்பதை நாம் அறிந்திருக்கின்றோம். என் மகனே, மகளே இந்நத்தாரில் ஒரு புனிதராவதற்கான அடிப்படைக்கு நான் உங்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

பிள்ளைகளே, இந்த வருடம் நீங்கள் கழித்த விதத்தை திரும்பிப் பாருங்கள். வீட்டில், பாடசாலையில், ஆலயத்தில் , சமூகத்தில் நற்செயல்களை செய்வதன் மூலம் இயேசுவை மற்றவர்களுக்கு எடுத்து காட்டுவதற்கு முடியுமானதாக இருந்ததா? அவ்வாறு செய்யமுடியாமல் போயிருந்தால், வெளிப்படையான விடயங்களுக்கு அழங்காரத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், சிறிய மறைத்தூதரைப் போல் பெரியோர்களுக்கும் முன்னுதாரணமாக, உள்ளார்ந்த தூய்மையுடன். இறையன்பை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு எம்மில் இருக்கும் ஒரு பலவீனத்தையாவது மாற்றிக்கொண்டு இந்நத்தாரில் இயேசுவிடம் செல்ல திருப்பலிக்கு ஆயத்தமாகுவோம். அப்போது குழந்தை இயேசு உங்களுக்கும் ஒரு புனித வாழ்வை பரிசாகக் கொடுப்பார்.


அன்பும், சமாதானமும் நிறைந்த மகிழ்ச்சியை பொதி சுமந்து வரும் நத்தாரும், புதுவருடமும் மலர்வதற்கான இறையாசீர் உரித்தாகட்டும்.



# கவிதைத் துளிகள்



## மனித நேயம்!



அன்பு என்பது அவனியில் ஒளிர
ஆணவம் என்பது வாழ்வில் ஒழிய
இன்று நாம் ஒன்றாய் இருக்க
ஈ போல எங்கும் பரந்து இருக்க வேண்டும்

உன்னோடும் அயலானோடும்
ஊர் ஊராய் எங்கு சென்றாலும்
எல்லோரும் உறவோடு இருக்க
மனித நேயம் ஏணியாய் உதவும்

ஐயோ என்று யார் வந்தாலும்
ஒற்றுமை என்னும் பண்போடு
ஓடிப்போய் உதவ வேண்டும்
அதற்கு ஔடதமாய்
மனித நேயம் இருக்க வேண்டும்



சீ. போல் கௌசான்
தரம் - 5A
நாயபெத்த பங்கு
அன்னை வேளாங்கன்னி ஆலயம்



# கருவறைக்குள் கடவுள்

சமுத்திரத்தில் ஒன்றை சிரட்டைக்குள் அடைக்கும்படி
ஆண்டவரின் ஆணையாகியது
கல்லறைக்குள் மூன்று நாள் கட்டுப்பட மறுத்தவன்
பத்து மாதங்கள் ஒரு கருவறைக்குள் இருக்க சம்மதித்தான்.

ஆம்! பூமியின் ஒதுக்குப் புறத்தில் ஒரு புதுமை நிகழ்ந்தது
மானிட மீட்பு மண்ணுக்கு வர கன்னியின்
கருவறைக்குள் கடவுள் கர்ப்பமானார்.

ச. பிருந்தா பறுணார்ந்து
தரம் - 6
அரிப்பு
மன்னார்





# பூக்கள்



காலையில் சூரியனின் வருகையை
எதிர்ப்பார்க்கும் அழகே
உன்னை பார்க்க நான்
ஓடோடி வருகிறேன்.

ஏனென்றால், உன்னை நான்
நேசிக்கின்றேன் அதை விடவும்
இறைவா நீயாக நினைத்து
உன் படைப்பை நேசிக்கின்றேன்



ஜே. மேரிஷிரோமி
தரம் - 9
நாயபெத்த பங்கு
அன்னை வேளாங்கன்னி ஆலயம்

# மனித மாண்பும் குடும்பமும்

## குடும்ப ஆன்மீகம்



குடும்ப வாழ்வின் நிகழ்வுகள் அனைத்தையும், இறைவனை உயிர்த்துணர்ந்து வாழ்வது குடும்ப ஆன்மீகமாகின்றது. குடும்பம் மூவொரு இறைவனை பிரதிபலிக்கின்ற இடமாக அவரைச் சந்தித்து அவரது அன்பு, அருள் பிரசன்னத்தை உணர்ந்து அனுபவிக்கின்ற இடமாக, இறை அருட்சாதனங்களை வாழ்வாக்கும் இடமாக இறையாட்சியை இலக்காக் கொண்டு அதன் மதிப்பீடுகளின் படி வாழ்கின்ற இடமாக இறையன்பையும், மனித நேயத்தையும் பேணுகின்ற இடமாக அமைகின்றது. இத்தகைய குடும்ப ஆன்மீகம் வாழப்பட பின்வரும் தீர்மானங்கள் பரிந்துரைக்கப்படுகிறன.

நாளாந்தம் குடும்ப செபத்தையும், குடும்ப செபமாலையையும் இறைவார்த்தைக்கு செவிமடுத்து செபிக்கின்ற செயற்பாட்டையும் வலியுறுத்தி ஊக்குவித்தல்.

*செயற்பாடு:*

பங்குத்தந்தையர், துறவறசபையினர், குடும்பப்பணிக்குழுவினர், அன்பிய ஊக்குவிப்பாளர் இதில் கவனம் எடுத்தல் வேண்டும்.

இவ் ஆண்டில் நிகழும் ஆலயத் திருவிழாக்களில் பொருத்தமான வழிபாடுகளிலும் மனித மாண்பும் குடும்பமும் சார்ந்த கருப்பொருளில் மறையுரைகள் கொடுக்க ஒழுங்கு செய்தல்.

*செயற்பாடு:*
பங்குத்தந்தையர், பங்கு மேய்ப்புப்பணிச்சபை, மறையுரையாளர்கள்.

மனித மாண்பும் குடும்பமும் தொடர்பான விவிலிய அறிவினை கருத்தமர்வுகள், துண்டுப்பிரசுரங்கள் வழியாக குடும்பங்களுக்கு வழங்குதல்.

*செயற்பாடு:*
பங்குத்தந்தையர், குடும்ப ஆணைக்குழு, விவிலிய ஆணைக்குழு.



பல்வேறு வகையில் பாதிப்புற்ற மக்களின்். குடும்பங்களின் உள்மனக் காயங்களை ஆற்றும் உளநல ஆற்றுப்படுத்தலுக்கான தியானங்கள், நிகழ்வுகள் கருத்தமர்வுகளை நடாத்துதல்.

ஆலய வழிப்பாடுகள் உடைந்து போன உள்ளங்களை கட்டியெழுப்பும் வகையாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும் அமைதல்.



## செயற்பாடு:

1. பங்குத்தந்தையர்.

2.. தோட்டவெளி ஆன்மீக மையம்

தியானங்களை, குணமாக்கல் வழிபாடுகளை நடாத்துதல்.

3. வாழ்வோதையம் உளநல ஆற்றுப்படுத்தல் கருத்தமர்வுகளை நடாத்துதல்.

4. அருட்திரு. கிறிஸ்ரியன் வாஸ் அடிகளாரின் புதுப்பித்தல் உரைகள்.

தொடர்ச்சியான திட்டமிட்ட கிராமமான குடும்ப சந்திப்புக்களை மேற்கொள்ளுதல். குருக்கள், துறவியர், பொதுநிலைப் பணியாளர் தனியாகவும், குழுவாக வசதிற்கேற்ப ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் இரண்டு குடும்பங்களை சந்திக்கும் உறுதி கொண்டு செயற்படுதல். வாரத்திற்கு ஒருநாள் அதுவும் ஒவ்வொரு புதன் கிழமையும் பங்குத்தந்தையர், அருட்சகோதரிகள், பொதுநிலையினர், குடும்ப சந்திப்புகளை கட்டாயமாக மேற்கொள்ள மனம் வைத்து செயற்படுதல். இது விடையமாக கல்விப்பணி மற்றும் இரதப்பணிகளை மேற்கொள்ளும் அருட்சகோதர சகோதரிகள் தங்கள் கடின பணியின் மத்தியிலும் வாய்ப்பினை பயன்படுத்தி அர்ப்பணத்தோடு குடும்ப சந்திப்பில் ஈடுபட முயலுதல்.

## செயற்பாடு:

பங்குத்தந்தையர் தங்கள் பங்கில் பணியாற்றும் துறவற சபைகளுடன் இணைந்து அது குறித்து தீர்மானம் எடுத்துச் செயற்படுதல்.

"மூன்று மாதங்களாக ஒரு பங்கில் தங்கியுள்ள கத்தோலிக்க குடும்பங்களுக்கு, ஆலய பங்கின் செயற்பாடுகளுக்கு நிபந்தனையற்ற சக உரிமையும் முழு உரிமையும் உண்டு" என்ற கத்தோலிக்க திருச்சபையின் சட்ட திட்டங்களுக்கு இன்றியமையாத முறையில் திறந்த மனத்தோடு அமைந்து நடத்தல். அவ்வாறான குடும்ப உறுப்பினர்களுக்கு ஆலய உறுப்புரிமை ஆலய நிர்வாகம், வழிபாடுகள், திருவிழாக்கால திருவழிபாடுகள் போற்றவற்றில் சம பங்கேற்க வாய்ப்பு வழங்குதல்.

## *செயற்பாடு:*

இதை பங்கு மேய்ப்புப்பணிச் சபையினர் ஆலயத்திலும் ஆலய பொதுக் கூட்டத்திலும் பங்கு மேய்ப்புப்பணிச் சபைக் கூட்டத்திலும் தெளிவுபடுத்தி நடைமுறைப்படுத்தல்.

நிலுவைப்பணங்களையோ, வேறு எந்த கொடுக்கல் வாங்கலையோ திருவருட்சாதனங்களை வழங்கும் விடையத்தில் குறுக்கிட வைப்பது எந்த விடையத்திலும் ஏற்புடையதல்ல என்ற உண்மையை உணர்ந்து செயற்படுத்தல்.

## *செயற்பாடு:*

பங்குத்தந்தையர், பங்கு மேய்ப்புப்பணிச் சபை.

நன்றி.

என். நிபுனி தினேஷிகா
திருக்குடும்ப கன்னியர் மடம்
தரம் - 7
றம்பைக்குளம், வவுனியா

# கவிதைத்துளிகள்


## மனித மாண்பை குடும்பங்களில் பேணுவோம்

மனித மாண்பை பேணுவோம்
பிறரையும் உரிமைகளையும் மதிப்போம்
திருச்சபையில் - வளர்ந்து
ஆளாகித் திகழ்பவன் மனிதன்
அனுபவத்தைப் பொறுத்துத்தான்
எதிர்காலம் உருவாகிறது






குடும்பங்கள் ஒளிரும் தீபங்கள்
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
உலகிற்கு உப்பும் ஒளியும் குடும்பம்
அதில் உருவாகும் உறவு பிள்ளைகள்
இறைவழி இயங்கும் சமூகம் குடும்பம்
நம்பிக்கையும் செபமும் குடும்பத்தின் ஆணிவேர்



நல்ல குடும்பத்தில் இறைவன்
தனது இல்லம் அமைப்பார்
கிறிஸ்தவக் குடும்பம் விசுவாச அறிக்கை
இல்லம் உருவாக உள்ளம் உறுதி
உறவுகள் சங்கமம் குடும்பம்
குடும்ப வாழ்வு சுற்றுமடல்




மெ. தெ. யூப்பிரேசியா
தரம் - 8
திருக்குடும்ப கன்னியர் மடம்
றம்பைக்குளம், வவுனியா



## மூன்றெழுத்து வாழ்க்கை



உலகிலுள்ள **உயிர்** மூன்றெழுத்து!
உயிர் என்ற **சக்தி** மூன்றெழுத்து!
சக்தியின் வடிவம் **அன்னை** மூன்றெழுத்து!
அன்னைக்காக காட்டும் **அன்பு** மூன்றெழுத்து!
அன்பின் வடிவம் **அறிவு** மூன்றெழுத்து!
அறிவை வளர்க்கும் **பள்ளி** மூன்றெழுத்து!
பள்ளியில் கற்கும் **கல்வி** மூன்றெழுத்து!
கல்வியால் உருவாகும் **பதவி** மூன்றெழுத்து!
பதவியால் வளரும் **பணிவு** மூன்றெழுத்து!
பணிவால் அமையும் **மனைவி** மூன்றெழுத்து!
மனைவியால் உருவாகும் **மழலை** மூன்றெழுத்து!
மழலைக்குத் தேடும் **பணம்** மூன்றெழுத்து!
பணத்தைத் தேடும் **கைகள்** மூன்றெழுத்து!
கைகள் சேரும் **முதுமை** மூன்றெழுத்து!
முதுமையில் வரும் **முடிவு** மூன்றெழுத்து!
முடிவின் பின் தேவைப்படும் **பெட்டி** மூன்றெழுத்து!
பெட்டியில் அடங்கும் **பிணம்** மூன்றெழுத்து!
பிணம் கொண்டு செல்லும் **ஊர்தி** மூன்றெழுத்து!
சுடலையில் வைக்கும் **கொள்ளி** மூன்றெழுத்து!
கொள்ளியில் வரும் **அஸ்தி** மூன்றெழுத்து!
இதன் பெயர் கூட **கவிதை** மூன்றெழுத்து!









**ஜெ. மரிய லூட்சன்**
**முருங்கன் பிட்டி,**
**கிறிஸ்து அரசர் ஆலயம் முருங்கன்.**

# சுனாமி....



சுனாமிக்கு ஏன் இந்த கோபம்
மனிதனுக்கு ஏன் இந்த சாபம்

நீ தண்ணீரால் இந்த நாட்டையே நிரப்பினாய்
நாம் கண்ணீரால் இந்த உலகத்தையே நிரப்பினோம்



நீ வானம் மட்டும் திரண்டாயே
பல உயிர்களையும் திரட்டிப் போனாயே

நீ வேகமாய் எழுந்து நின்றாயே
நாம் சோகமாய் எம் துக்கத்தை தாங்கி நின்றோமே



நாம் செய்த பாவம் என்ன?
நீ கொண்ட மோகம் என்ன?

நீ அனைத்தையும் இழுத்துச் சென்றாயே
நாமோ அனைத்தையும் இழந்து நின்றோமே

நீ எமக்கு செய்யும் கைம்மாறு என்ன?
நீ வராமல் இருக்க நாம் செய்யும் பரிகாரம் என்ன?



விடை தேடி அலைகின்றோம் இந்தப் பாரில்
எமக்கு நீ சீக்கிரம் விடை கொடு..........

**ஈ. மரிய சுபாஷினி**
**தரம் - 9**
**புனித செபமாலை மாதா ஆலயம்**
**மாம்புரி**

# மன்னவன் இயேசு



இருள் சூழ்ந்த உலகம்
பாவத்தின் பிடியில் வாழ்ந்த
மக்களை மீட்பின் பாதையில்
மீட்டார் மன்னன் இயேசு.....



எம்மைப் போன்ற சிறுவர்களை
நேரிய வழி நடத்தவும்
மறையின் ஒளியில்
வாழவும் இவ்வுலகில்
மனுவுரு எடுத்தார்
மன்னவன் இயேசு

ஜெ.மெரி அனுராதா
தரம் - 3
மாதிரிக்கிராமம்
வஞ்சிக்குளம்

# நகைச்சுவை விருந்து

விமல் - தம்பி இந்த றோட் எங்கப்பா போகுது?
கமல் - அது எங்கையும் போகல்ல, நான் பிறந்ததில் இருந்து இங்க தான் சார் இருக்கு.



மகன் - பேய் எப்படிப்பா இருக்கும் ?
அப்பா - உங்க அம்மா மாதிரி இருக்கும்.

அப்பா - டேய் பக்கத்து வீட்டு பையன் இன்ரவிக்கு போனானே, நீ ஏன்டா போகல்ல?
மகன் - நான் உங்க பையன் அப்பா, நாலுபேர் கேள்வி கேட்கிற மாதிரி நடந்துக்கமாட்டேன் அப்பா.



றூ. சுலைக்சன்
தரம் - 7
புனித வியாகுல அன்னை ஆலயம்
அடம்பன்

# விடுகதைகள்

1. ஒன்றை ஒன்பதாக்குவான் மந்திரவாதி அல்ல அவன் யார்?

2. அங்கம்மா, தங்கம்மாவுக்கெல்லாம் அங்கங்கே வீடு, முத்தம்மாளுக்கு மட்டும் முதுகிலே வீடு அது என்ன?

3. தலையிலே ஒருகை அது என்ன?

4. கொம்புக்காரன் ஆனால், வம்புக்காரன் அல்ல அது என்ன?

5. கறுப்பர் கூட்டத்தில் வெள்ளையர் எட்டிப்பார்த்தால் கவலை அது என்ன?

6. சுட முடியாத இரட்டைக்குழல் துப்பாக்கி அது என்ன?

7. கண்ணுக்கு மையழகு, கழுதைக்கு இது அழகு அது என்ன?

8. உச்சாணி மரத்திலே உயர்ந்த கிளையிலே பட்டாணி இருந்து பாக்கு வெட்டுது அது என்ன?

9. ஏரித்தண்ணீர் வற்ற வற்ற எருமைக்கூட உப்ப உப்ப?

10. உச்சாணிக் கொம்பிலே ஒய்யாரமாய்
ஒரு இனிப்புப் பொட்டலம் அது என்ன?



சி. அல்ஜினா
தரம் - 4
கற்கிடந்த குளம்

விடைகள்

1. மைக்
2. நத்தை
3. வழுக்கை
4. மான்
5. நரைமுடி
6. மூக்கு
7. உதை
8. அணில்
9. பணியாரம்
10. தேன்கூடு





# புன்னகை பூக்கத் தயாரா!

வாக்காளர்: எங்க தலைவருக்கு அடிக்கடி மனசு மாறுற பழக்கம் எல்லாம் கிடையாது!

பதிவாளர்: "அதுக்காக சிம்ரனை மறங்காத சிங்கத் தமிழன் என்று ஃப்ளெக்ஸ் பேனர் வைப்பீங்க?"

கைதி: ஜெயில்ல இருக்கும் நம் தலைவர் ரொம்ப தான் ஓவரா போறாரு!

பார்லையாளர்: எப்படிச் சொல்றே!

கைதி: ஜாமீன் கேட்டு ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பி இருக்காரே!

பார்வையாளர் 1: அந்த வித்துவான் எந்த தைரியத்துல தினமும் ஒரு கச்சேரி பன்னுறாரு!

பார்வையாளர் 2: கேட்கிறதுக்கு யாரும் இல்லேன்ற தைரியத்தில!



பி. மேரி டனிக்கா
தரம் - 8
கிறிஸ்து அரசர்
மாணவியர் இல்லம்
முருங்கன்

# ஓவியத்தினூடே.......




திருக்குடும்பம்

யே. சுஜீவன்
தரம் - 7
பனிச்சையடி.



அன்னை மரியா

ஏ. நிஷாந்தினி
தரம் - 8
சிறுக்கண்டல் பங்கு
மன்னார்.



இறைவார்த்தை வாசிப்போம்

ஏ. நட்டாஷா ஐவொனி
தரம் - 9
திருச்சிலுவை ஆலயம்
ஹெட்டன்.

## எனது மிக்கி




ம. கபிசன்

தரம் - 3

புனித வியாகுல அன்னை ஆலயம்

அடம்பன்.

## மகிழ்ச்சி சிறுவர்



ச. பொனிஸ் ரெலா

தரம் – 7

விடத்தல் தீவு.

# புனித அந்தோனியார்



Pontifical Mission Societies
Diocesan Director
Diocese of Mannar
Sri Lanka

ஏ. தியோஜினஸ்
தரம் – 4
பள்ளிமுனை.




# முன்மாதிரிகையான திருக்குடும்பம்

## திருக்குடும்பத்தில் காணப்படும் பண்புகள்

இறைவனின் கருத்தை இடைவிடாமல் தேடியறியும், அதை நிறைவேற்றும் மனங்களை நாம் திருக்குடும்பத்தில் காணலாம். இவ்வாறான மனம் மாதாவுக்கும் புனித யோசேப்புக்கும் இருக்கவில்லையென்றால் அவர்களுடைய குடும்பத்தில் இறைமகனால் பிறந்திருக்க முடியாது. அவர்களது மனநிலை சாதாரண மக்களின் மனநிலையிலிருந்து எவ்வளவோ மாறுபட்டதாக இருந்தது. திருக்குடும்பத்தின் இயேசு மாதா சூசையப்பர் ஒருவர் ஒருவரை மிகவும் அன்பு செய்தனர், மதித்தனர், பொறுமையோடு நடந்து கொண்டனர், ஒத்துழைத்தனர், ஒற்றுமைக் குன்றாமல் கவனமாக இருந்தனர். அன்பு, அமைதி, மகிழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக திருக்குடும்பம் விளங்கியது.

## திருக்குடும்பத்தைக் குறித்து 13 ஆம் சிங்கராயரின் கருத்து

பாப்பாண்டவரான 13ம் சிங்கராயர் திருக்குடும்பத்தின் மேன்மையை அழகாக விளக்கியுள்ளார். கவனிப்பு, பாதுகாப்பு, பணிவு ஆகிய நற்பண்புகளைக் கொண்ட புனித யோசேப்பு தந்தையருக்கு சிறந்த எடுத்துக்காட்டு. அன்பு, பணிவு, தன்னடக்கம், மரியாதை, கீழ்படிதல் ஆகிய நற்பண்புகளால் தூய கன்னி மரியா பெண்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார். கீழ்படிதல், பணிவு, நல்ல நடத்தை ஆகியன குழந்தை இயேசுவின் பண்புகள். இவர் சிறுவர், சிறுமிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டு. வாழ்க்கையில் வளமையோடு இருப்பவர்கள் வளமையில் கட்டுப்பாடும், துன்பங்களில் மாட்சியும் வேண்டுமென்று உணர்ந்து கொள்ளலாம். செல்வர்கள் தங்களது செல்வச்சிறப்பைவிட நற்பண்புகள் தான் முக்கியம் என்பதை அரச குலத்தைச் சேர்ந்த திருக்குடும்பத்தில் கற்றுக் கொள்ளலாம்.



தொழிலாளர்களும் சுமை சுமப்போரும் தங்களுடய வறுமையை எண்ணி முணுமுணுக்காமல் எவ்வாறு மகிழ்ச்சியோடு இருக்கவேண்டும் என்பதைத் திருக்குடும்பத்திடதிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

திருத்தந்தை தொடர்ந்து பின்வருமாறு கூறுகின்றார்: இறை அன்பு முழுமையாக குடும்பங்களில் விளங்கச் செய்ய மாதா பெண்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அமைதியும் சகோதர அன்பு துலங்கவும் , குடும்பம் சீராகச் செல்லவும் இறை அன்பு குடும்பத்தில் இருக்க வேண்டியது அவசியம் அல்லவா?



வாழ்க்கையில் சோதனைகள் தோன்றும் போது கலங்காமல் இறைவனிடம் நம்பிக்கை கொண்டு முன்னேற வேண்டும் என்று கிறிஸ்மஸ் எமக்கு அறிவுறுத்துகின்றது. தியாகமின்றி வெற்றி வேண்டும் என்று நினைப்பதுதான் இக்கால மனநிலை. வாழ்க்கையைப் பகிர்ந்தளிப்பதுதான் வாழ்க்கைக்குப் பொருள் தரும் என்பது தான் கிறிஸ்மஸ் செய்தி.

**அனைவருக்கும் இறையாசீருடனான இனிய நத்தார் வாழ்த்துக்கள் !**

**தேசிய செயலகம்.**



# நற்சிந்தனைகள்



நல்லதை விதை தீயதைப் புதை.

நல்லவற்றைப் பாறையில் எழுது, தீயவற்றைப் பனிக்கட்டியில் எழுது.

பயம் இருந்ததும் இல்லாதது போல் நடிப்பது தான் துணிவு.

நீ எந்நாளும் காணும் தெய்வம் உன் தாய் தான்.

கல்வி என்பது ஒரு ஏணி, அதில் ஏறுபவன் ஞானி.

தலை குனிந்து படித்தால் தான், தலை நிமிர்ந்து நடக்கலாம்.

அழகு என்பது மெழுகைப் போன்றது, அன்பு என்பது விளக்கைப் போன்றது.


எஸ். யதுஸ்கா

தரம் - 9

கல்லடி டச்பார்

மட்டக்களப்பு.


## மாணவர்களின் சிந்தனைக்கு....



சீருடையணிந்து சிரித்த முகத்துடன்
பாடசாலை வந்துவிட்டாய்
படித்ததென்று போய்விடுமோ!!!!!..........

வகுப்பறைக்குள் வந்திருந்து
வாயோயாமல் வம்பளத்திட்டால்
வருகின்ற தலைமுறையும் நம் பெயரை சொல்லிடுமோ

புத்தகப் பையினுள் புரியாத புதிர்கள்
புதைந்து போய் கிடைக்கையிலே
பக்கத்துப் பையனோடு ஆனந்தமாய்
அரட்டை அடிக்கிறாயே
அறிவு கெட்டவனே............



எஸ். நிக்கோலின்ஸ் லியோன்

தரம் - 9

தலைமன்னார் கிராமம்

# சிந்தனைத் துளிகள்

1. தனக்கென்றே வாழ்பவன் மிருகம்
தனக்காகவும் பிறருக்காகவும் வாழ்பவன் மனிதன்
பிறருக்கென்றே தன்னை அர்ப்பணிப்பவன் தெய்வம்.



2. எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பதை விட
எவ்வாறு வாழ்ந்தோம் என்பதே முக்கியம்.

3. உன் ஆசைகள் நிறைவேறில்லை என்றாலும்
மற்றவர்களின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பதற்கு
நீ இவ்வுலகில் வாழ வேண்டும்.

4. உன் கண்ணீர் அயலவனுக்கு ஆறுதல் அளிக்கின்றதென்றால் கலங்கி கண்ணீர் விடவும் தயாராகு.

5. ஒரு மெழுகுவர்த்தி இன்னொன்றை ஏற்றுவதால் எதையும் இழப்பதில்லை.

6. வாழ்க்கை மாறலாம் ஆனால், உதிர்வதில்லை. நம்பிக்கை மறையலாம் ஆனால், இறப்பதில்லை.

7. சாதிக்க நினைப்பவன் மட்டுமே அதிகம் சோதிக்கப்படுகிறான்.

8. உன் நிழல் கூட நீ நினைப்பது போல் என்றும் நடப்பதில்லை, பின்பு ஏன் அதை மற்றவரிடம் எதிர்ப்பார்க்கின்றாய்?.

9. இன்றே உங்களால் செய்ய முடிந்ததை ஒருபோதும் நாளை தள்ளிப் போடாதீர்கள்.

10. கனவுகள் இல்லாத வாழ்க்கை இறக்கை இல்லாத பறவைக்குச் சமன்.

அ. அன்ரனிதாஸ்
தரம் - 8
மன்/ அடம்பன் ம. ம. வித்தியாலயம்



# சிந்தனைத் துளிகள்



எவரும் எதிர்பாராதவை - மரணம், நேரம்

ஞாபகத்தில் இருக்க வேண்டியவை - நன்றி, கடமை

யாராலும் திருட முடியாதவை - கல்வி, அறிவு

தூய்மை - உள்ளத்துக்குத் தேவையானது

தூய உள்ளத்துடன் செய்ய வேண்டியவை - தர்மம், செபம்

நட்பு - உண்மையான நண்பனுக்கு உரித்தானது

வாழ்வில் ஒரு முறை வருவது - பெற்றோர், வாலிபம், வயது

நம்பிக்கை - வாழ்க்கைக்கு முக்கியமாகத் தேவையானது

# விவிலிய வினாக்களும் விடைகளும்

1. லூக்காஸ் எந்த நாட்டில் பிறந்தார்?

   சிரியா நாட்டிலுள்ள அந்தியோக்கியாவில் பிறந்தார்.

2. மரியாளின் தாய், தந்தையர் பெயர் என்ன?

   யுவக்கீன், அன்னம்மாள்

3. "இடியின் மகன்" என்றழைக்கப்படுவர் யார்?

   புனித யோவான்



4. அருளப்பரின் தந்தையின் பெயர் என்ன?

   சக்கரியாஸ்

5. அப்போஸ்தலர் பணியை எழுதியவர் யார்?

   புனித லூக்காஸ்

6. ஆபிரகாமின் தந்தையின் பெயர் என்ன?

   தெராகு

7. அருளப்பர் நற்செய்தி எந்நூற்றாண்டு எழுதப்பட்டது?

   கி. பி. 90 - 100 ல்

சீ. தர்சனா

முருங்கன்பிட்டி

பாலத்துவ சபை

# ஒளியின் குழந்தை

அன்புள்ள மகனே, மகளே!

சிறுவர்களாகிய உங்களுக்கு ஒளியின் குழந்தைகளாவதற்கு மீண்டுமொரு வாய்ப்பு கிட்டியுள்ளது. இவ்வருடத்தின் திருப்பாலத்துவ சபையின் கருப்பொருள் ஞாபகமிருக்கின்றதா? “சிறுவர்கள் எமக்கு இயேசுவே ஒளியாவதால் உலகிற்கு நாம் ஒளியாவோம்.” ஆம், இயேசு கிறிஸ்துவின் ஒளியால், உலகை ஒளிமயமாக்க இவ்வருடம் பூராகவும் நீங்கள் முயற்சி செய்திருப்பீர்கள் என நான் நினைக்கின்றேன்.

ஆம், மார்கழி மாதம் நெருங்குகையில், குளிர்காற்று வீசுகையில், எங்களால் மறக்கவே முடியாத இனிய நாள் “நத்தார்” தினமாகும். இந் இனிய நாளில் இறைவனால் கொடுக்கப்பட்ட ஒளியின் விளக்கான, குழந்தை இயேசு சிறுவர்களாகிய உங்களுக்கு ஒளியாக திகழ்கிறார் அல்லவா?

அன்று பாவத்தால் இருளாயிருந்த உலகை ஒளிமயமாக்கியது இந்த ஒளியின் குழந்தை இயேசுவின் பிறப்பாகும். இவர், முழு உலகமும் ஒளியில் பிரகாசிக்க இடமளித்தார். அதனால் இந்த ஒளியின் குழந்தையின் பிறப்பை கொண்டாடுவதற்கு காத்திருக்கும் சிறுவர்களாகிய உங்களுக்கும் இந்நாளை சிறப்பாக கொண்டாடுவதற்கு அந்த ஒளியின் மைந்தன் அழைப்பு விடுக்கின்றார். இந்த நத்தாரானது சிறுவர்களுக்கு மிகவும் விசேடமான நாளாகும்.

பாவத்தினால் இருளான உள்ளங்களிடத்திற்கு.....
எழிமையினால், வறுமையினால் தளர்ந்துள்ள உள்ளங்களிடத்திற்கு......
பல்வேறுபட்ட பிரச்சினைகள், கவலைகளினால் இருளான
உள்ளங்களிடத்திற்கு....

இயேசுவின் ஒளியை கொண்டு செல்ல உங்களுக்கு முடியும். ஆம், இதற்காக முயற்சியுங்கள். ஆகவே, இவ் இயேசுவின் பிறப்பின் மூலம் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ குழந்தை இயேசுவின் வரங்களைப் பெறவும், அவர்களின் ஒளியின் மூலம் இந்நத்தாரை சிறப்பிக்கவும் சிறார்களாகிய உங்களுக்கு வரம் கிடைக்க வேண்டுமென மனமாற வாழ்த்துகின்றேன்.

இறையாசீர்! உங்கள் அனைவருக்கும் ஒளியின் மைந்தனின் ஆசீர்!



அருட்சகோதரி. மரிய ஷார்மென்
அப்போஸ்தலிக்க கார்மேல் சபை
திருப்பாலர் சபை ஊக்குவிப்பாளர்



# சிறுகதை

## மனந்திரும்புங்கள்

ஓர் அழகிய கிராமத்தில் முதிர்ந்த தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். கணவனின் பெயர் முத்து. மனைவியின் பெயர் தங்கம்மா. கணவனோ பெயரிற்கேற்ற முத்தானவன். மனைவியோ பெயரிற்கு எதிர் மாறானவள். ஒரு நாள் முத்து வழியோராமாக சென்றுக்கொண்டிருந்த போது ஒரு குருவி வழியில் அடிபட்டுக் கிடந்தது. அதைக்கண்ட முத்து ஓடிச் சென்று அக்குருவியை கையில் எடுத்தான். உடனே அக்குருவியை வீட்டிற்கு எடுத்துச்சென்றான்.

அக்குருவிக்கு அவன் மருந்து கட்டிக் கொண்டிருந்தான். இதனைக்கண்ட தங்கம்மா ஆத்திரமடைந்து அவனது கையிலிருந்த குருவியை வெளியே தூக்கி எறிந்தாள். மிகவும் கோபத்துடன் முத்து தங்கமாவிடம் எதற்கு நீ அந்த ஒரு பாவமும் அறியாத குருவியை தூக்கி எறிந்தாய் என்று கேட்டு விட்டு உடனே ஓடிச்சென்று பார்த்த போது அக்குருவியை காணவில்லை. முத்து சோர்வுடன் சென்றான்.


மறுநாள் காலையில் முத்து வீதியோராம் வேலை தேடிச்சென்றான். சிறுதூரம் பயணம் செய்யும் போது "கீச்கீச்" என்ற ஓர் சத்தம் கேட்டது. உடனே முத்து அங்கும் இங்கும் பார்த்தான். அருகே மரத்தில் அந்த குருவி அவனைப் பார்த்து புன்னகை புரிந்தது. அவன் அக்குருவியை அழைத்த போது அக்குருவி பறந்து வந்து தோலில் அமர்ந்து பேசத் தொடங்கியது. அக்குருவி அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்று தன்னால் இயன்ற உதவியாக ஓர் பழத்தை அளித்து உண்ணும் படிகூறியது.

அவன் பழத்தை உண்ட பின்பு, ஒரு பெரிய பெட்டியையும், ஒரு சின்ன பெட்டியையும் காட்டி "எது வேண்டும்" என்றது. அதற்கு அவன் சிறிய பெட்டியை எடுத்தான். வீடு சென்று அதை திறந்து பார்த்து ஆச்சரியமடைந்தான். பெட்டி நிறைய வைரங்களால் நிரப்பப்பட்டிருந்தன. அதை இவன் தங்கமாவிடம் காட்டிய போது அவள் பூரிப்படைந்து அந்த குருவியின் வீட்டிற்கு செல்லும் வழியை அறிந்து கொண்டாள்.

மறுநாட்காலையில் அவள் புறப்பட்டு சென்றாள். அங்கு சென்றதும் குருவியைப் பார்த்து பொய்யாக மன்னிப்புக் கேட்டாள். தந்திரமறிந்த குருவி அவளுக்கும் ஓர் பழத்தைக் கொடுத்து இரண்டு பெட்டிகளைக் காட்டியது. ஆர்வமுடன் தங்கம்மா பெரிய பெட்டியை வாங்கிக் கொண்டாள்.

ஆர்வமுடன் வீடு சென்று திறந்தவுடன் பெட்டியினுள் ஒளிகதிர்களை வீசியபடி ஒரு திரு இருதயம் காணப்பட்டது. தங்கம்மா ஆச்சரியத்துடன் உற்று நோக்கினாள். இருதயம் பேசத் தொடங்கியது. "தங்கம்மா நீ ஒரு பாவி அதனால் நான் உன்னிடம் கிடைத்துள்ளேன். நீ மனந்திருந்தி தூய வாழ்வு வாழ வேண்டும்." என்று கூறியது. தங்கம்மா கண்ணீர் பெருக, "நான் பாவி" என்று கத்தினாள். முத்து உடனே ஓடி வந்து, "தங்கம்மா நீ மனந்திரும்பியதே எனக்கு போதும்" என்று கூறி இருவரும் சந்தோஷமாக வாழ்ந்தனர்.

நன்றி



அசோக்குமார் பிரசாந்தினி
தரம் - 9
கிறிஸ்து அரசர் மாணவியர் இல்லம்
முருங்கன் பங்கு

# மலரட்டும் இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு



புதிய ஆண்டே வா
பூத்துக் குலுங்க வா
பழைய ஆண்டின் நன்மைகளை
பரமன் இயேசு நடத்தினதை
மறவேன் என்றும் உள்ளத்திலே
மலரும் ஆண்டில் துணை புரிவார்.
இரண்டாயிரத்து பதின்நாலாம் ஆண்டு
கழியட்டும்
இரண்டாயிரத்து பதின் ஐந்தாம் ஆண்டு
மலரட்டும்
பயந்திட வேண்டாம் என் மனமே
பரமன் இயேசு முன் சென்று நடத்துவார்.

ஜீ. ரொஷானி
தரம் - 8
நாயபெத்த பங்கு
கோணமுட்டாவ





# இயேசுவே......

விழி திறந்து பார்த்தேன் வறுமை தெரிந்தது முன்னால்
உண்பதற்கு உணவும் இல்லை தங்குவதற்கு இல்லம் இல்லை.
எனக்குச் சொந்தமானது என் சரீரமும்
கண்ணில் வடியும் கண்ணீரும் இதனை அறிந்த
நீ என்னை காத்து இரட்சிப்பாய்
என உன்னடி சேர்கிறேன்
இயேசுவே.........



**எஸ். அஸ்கினாஸ் யாவான்**
**8 பீ.**
**திருச்சிலுவை**
**ஹெட்டன்.**



# இயேசு

கன்னிமரியின் உதரத்தில் உருவாகிய உத்தமரே இயேசு......
பாவத்தை *போக்க* பாரினில் பிறந்தவரே இயேசு.....
பாடுகள் பல பட்டு சிலுவையில் மரித்தவரே இயேசு......
மூன்றாம் நாள் உயிர்த்து, கடவுளின் மகன் என்று சான்று பகர்ந்தவரே இயேசு......
இயேசு என்னும் நாமமே இனிமையான நாமம்.....



பீ. போல் ஜனுஸ்ரன்
மாதிரிக்கிராமம்
வஞ்சிக்குளம்.

**அன்பின் தம்பி தங்கையரே!**

மறை அரும்பில் பிரசுரிப்பதற்கு நீங்கள் ஆர்வத்துடன் அனுப்பும் அனைத்து ஆக்கங்களுக்கும் நன்றி. உங்கள் சுவைமிக்க ஆக்கங்களை தொடர்ந்தும் எமக்கு அனுப்பி வையுங்கள்.



நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் அனைத்தும் நன்கு ஆராய்ந்து உங்களின் பங்குத் தந்தை அல்லது ஊக்குவிப்பாளர் உறுதி செய்திருத்தல் வேண்டும். உங்கள் ஆக்கங்களை தெளிவான கையெழுத்தில் எழுதி அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்வதோடு ஓவியங்களை அனுப்புபவர்கள் பென்சில் மட்டும் உபயோகித்து ஓவியங்கள் படங்கள் வரைதல், படங்களை பிரதிசெய்து அனுப்புதல் ஆகியவற்றைத் தவிர்த்துக் கொள்ளும் படியும் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் ஆக்கங்கள் மறையை தழுவியதாக இருக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

உங்கள் ஆக்கம் பிரசுரமானதும் உங்களுக்கு ஒரு மறையரும்பு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். எனவே உங்கள் பெயர், முகவரி, பங்கு, மறைமாவட்டம் என்பவற்றை தெளிவாக எழுதி அனுப்புவதுடன், தொலைபேசி வசதி இருப்பின் அவற்றையும் குறிப்பிட்டு அனுப்பவும். இறைத்தந்தை உங்கள் ஒவ்வொருவருக்கும் அருளியுள்ள திறமைகளை வெளியுலகிற்கும் காட்டி ஏனைய பிள்ளைகளும் பயன்பெற உங்களுக்கான இம்மறையரும்பு சஞ்சிகையை பயன்படுத்துங்கள்.

**"இயேசுவின் சிறிய மறைதூதர்களே!**
**மறையுரைக்க வாருங்கள்."**




தேசிய செயலகம்

பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய காரியாலயத்தில் பணிபுரியும்
ராகமையை வதிவிடமாகக் கொண்ட
செல்வி. சுவெந்தி லக்ஷிகா பெர்னாந்து மற்றும்
ஜா-எலயை வதிவிடமாகக் கொண்ட
திரு. ருமேஷ் சில்வா ஆகிய இருவரும்
கடந்த வைகாசி மாதம் 24ம் திகதி
ராகமை புனித பேதுரு, பவுல் தேவாலயத்தில்
இறையாசீரோடு தம் புதிய வாழ்வை ஆரம்பித்தனர்.



புதிய வாழ்வை ஆரம்பித்த புது தம்பதியினரான
ருமேஷ் - சுவெந்தி இருவருக்கும் தூய
ஆவியானவரின் பலமும்
வழிநடத்துதலும், இறையன்னையின் பாதுகாவலும்
என்றும் உரித்தாகுக.....

தேசிய இயக்குனர் உட்பட செயலக உறுப்பினர்கள்



ලෝක ධර්මදූත ඉරුදින World Mission Sunday உலக மறைபரப்பு ஞாயிறு 19.10.2014
"ජීවිත වෙනසකින් දේව රාජ්‍යයේ වටිනාකම් පතල කරමු."
"Let us change our lives to proclaim the values of the Kingdom."
"மனம் மாறி இறையரசின் மதிப்பீடுகளை அறிவிப்போம்."
ශුද්ධාසනීය ධර්මදූත සංගම්, 19, බැල්කම් පෙදෙස, කොළඹ 08
பாப்பிறை மறைபரப்புச் சபைகள், 19 பல்கம் இடம், கொழும்பு 08
Pontifical Mission Societies,Balcombe Place, Colombo 08, Sri Lanka
Tel / Fax : 011-2685673 email : ndpms@sltnet.lk web : www.pontificalmission.org